**சுருக்கம்**

நீர்வளம் – பொதுப்பணித்துறை – நிலத்தடிநீர்வளத்தினைப் பெருக்க ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் பெருந்திட்டத்தினை ரூ. 550 கோடியில் 2008–09 முதல் 2010–2011 வரையிலான மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது – 2008–2009ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறையால் செயல்படுத்தப்படவுள்ள 17 பணிகளுக்கு ரூ. 4,16,40,000/– – ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(ஆர்.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.242 நாள் 5.8. 2008

ஆடி 21,

திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க

அரசாணை(நிலை) எண். 198, பொதுப்பணி(ஆர்.2)த்துறை, நாள் 10.6.2008

மீண்டும் படிக்க

தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை கடித எண். எப்.1/3000/2008, நாள் 8.7.2008.

**ஆணை:**

தமிழகத்தில் மிகவும் வேகமாகவும் கட்டுப்பாடற்ற முறையிலும் நிலத்தடி நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், அதன் தரம் குறைந்தும், அரிதான, இயற்கைவளமான நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. சட்டப் பேரவையில் 23.1.2008 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் தமிழ்நாட்டில் நீர் பற்றாக்குறை பகுதிகளில் வரும் நிதியாண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீர் ஓடைகளில் பயன்படுத்தப்படாமல் போகும் நீரினை தடுப்பணைகள் கட்டி சேமித்து அதனை ஆண்டு முழுவதும் அப்பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் வேளாண்மை ஆகியவற்றிற்கு பயன்படுத்துவதற்கான பெரும் திட்டம் (Master Plan) செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் 2008–09ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் இத்திட்டம் இந்த நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து முதன்மை தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர்( பொது) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 2008–09 முதல் 2010–2011 வரையிலான மூன்று ஆண்டுகளில், மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், ஊருணிகள்

ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெரும்திட்டத்தினை (Master Plan) ரூ. 550.00 கோடி மதிப்பீட்டில் நிலத்தடி நீர் தொடர்புடைய துறைகள் செயல்படுத்த, அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன. 2008–09ம் நிதியாண்டில் பணிகளை மேற்கொள்ள நீர்வள ஆதாரத் துறைக்கு ரூ. 48.00 கோடி, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்திற்கு ரூ. 2.00 கோடி, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 24.00 கோடி, வேளாண் பொறியியல் துறைக்கு ரூ. 25.00 கோடி, வனத்துறைக்கு ரூ. 1.00 கோடியும் ஆக மொத்தம் ரூ. 100.00 கோடி நிதியொதுக்கமும் செய்யப்பட்டது. ரூபாய் 1.00 கோடிக்கு மேற்பட்ட ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான விரிவான திட்ட மதிப்பீட்டினையும், ரூ. 1.00 கோடிக்கு உட்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளை ஒரே தொகுப்பாகவும் பெற்று நிதித் துறையின் இசைவோடு சம்பந்தப்பட்ட துறைகள் நிருவாக ஒப்புதல் வழங்கிடவும் ஆணையிடப்பட்டது.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) தமது கடிதத்தில் 2008–09ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறையின் மூலம் ரூ. 4,16,40,000/– மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ள 17 தடுப்பணைகள் கட்டும் திட்டங்களுக்கான மதிப்பீடுகளை (2008–09ஆம் ஆண்டைய விலை விகிதப்படி) அனுப்பி, இதற்கு அரசின் ஒப்புதலை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களது கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து,, மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெரும் திட்டத்தின் கீழ், 2008–09ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறையின் மூலம் இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் ஒரு கோடிக்கு உட்பட்ட 17 பணிகளை ரூ. 4,16,40,000/– மதிப்பீட்டில் (ரூபாய் நான்கு கோடியே பதினாறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) அதனதன்படி பிரித்து செயல்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 4ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: -

"4702–00. சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 102. நிலத்தடி நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II. மாநிலத்திட்டம் – JC. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு திட்டம்–16.பெரும்பணிகள் (து.தொ.கு.4702–00–102–JC–1601)"

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினமான ரூ. 416.40 இலட்சங்களை பெற்று வழங்க முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை (மற்றும்) தலைமைப் பொறியாளர்(பொது), சென்னை – 5 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலும், எதிர்பாரா செலவினங்கள்(Unforeseen Items) சில்லரை மேற்பார்வை செலவினங்கள்(Petty Supervision Charges) மற்றும் சில்லரை செலவினங்கள்(Contingency Charges) ஆகிய அனைத்து இனங்களும் சேர்த்து (Altogether) மொத்த பணிகளுக்கான செலவினத்தில் 2.5%க்கு மிகாமல் செலவிடப்பட வேண்டும் என்றும், இதனை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கிடுமாறும் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 44542 / பொ.ப II/2008–1, நாள் 30.7.2008ல் பெறப்பட்ட இசைவோடு வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

எஸ். ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர்(பொது), சென்னை–5
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சேப்பாக்கம், சென்னை–5
தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்),
தரமணி, சென்னை –113.
அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள்.
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மற்றும் திருநெல்வேலி.
மாநில கணக்காயர், சென்னை–18/ பெயரில்
சம்பள கணக்கு அலுவலர்(கிழக்கு) சென்னை – 5
ஆளுநரின் தனிச் செயலர், கிண்டி, சென்னை–25
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–9
பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வாரியம், சென்னை–5
தலைமைப் பொறியாளர்(வேளாண்மை பொறியியல்), நந்தனம், சென்னை–35
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர்,வனத்துறை , சென்னை–6
பொதுப்பணித்துறை (அனைத்து பாசனப் பரிவுகள்) சென்னை–9
நகல்
நிதித்துறை (பொ.ப.II) /வேளாண்மை/சுற்றுச் சூழல்/ நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
இ.கோ/உ.கோ.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

<u>இணைப்பு</u>

அரசாணை(நிலை) எண். 242, பொதுப்பணி(ஆர்.2)த் துறை, நாள் 5.08.2008

| வ.எண் | திட்டங்களின் பெயர் | 2008–2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புதுகுய்யனூர் அருகே ஏ.பி.டி.தோட்டம் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | **32.85** |
| 2 | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பட்டவர்த்தி அய்யம்பாளையம் கிராமம் கருப்புசாமி தோட்டம் அருகில் தடுப்பணை அமைத்தல் | **45.00** |
| 3. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இக்கரை நெகமம் புதூரில் குளத்தூர் பள்ளம் குறுக்கே க.ச.எண் 165 சின்னமாதையன் தோட்டம் அருகில் தடுப்பணை அமைத்தல் | **31.85** |
| 4. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இராமபயலூரில் சின்னிம்பதி ஓடையில் காலப்ப கவுண்டர் மற்றும் ஆறுமுகம் தோட்டம் அருகில் தடுப்பணை அமைத்தல் | **10.00** |
| 5. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இராமபயலூரில் கண்ணிமார்கோவில் மற்றும் வடிவேல் தோட்டம் அருகில் தடுப்பணை அமைத்தல் | **28.95** |
| 6. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இக்கரை நெகமம் புதூர் கிராமம் குளத்தூர் பள்ளம் குறுக்கே பாலு மற்றும் பாட்டைய கவுண்டர் தோட்டம் அருகில் தடுப்பணை அமைத்தல் | **31.80** |
| 7. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இராஜன் நகர் தயிர் பள்ளம் குறுக்கே பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்கு 6500 மீட்டர் கீழ்புறம் தடுப்பணை அமைத்தல் | **18.00** |
| 8. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இராஜன் நகர் தோரண பள்ளம் அருகில் கஸ்தூரி நகரில் ஜி.என். முத்தப்பன் நிலம் மற்றும் கைபம்ப் அருகில் தடுப்பணை அமைத்தல் | **12.90** |

| | | |
|---|---|---|
| 9. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், வரதம்பாளையம் கிராமத்தில் சாமிகவுண்டர் மற்றும் ரங்கசாமி நாடார் தோட்டம் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | **15.80** |
| 10. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், வரதம்பாளையம் கிராமம் குளத்தூர்புதூர், கிருஷ்ணசாமிநாயுடு மற்றும் சின்னசாமி தோட்டம் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | **10.00** |
| 11. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், க.ச.எண் 241 புளியங்கொம்பை கிராமம் காலிகுட்டி மற்றும் மஸ்தம்மை தோட்டம் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | **15.80** |
| 12. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், இராமப்பயலூர் கிராமம் ராமசாமி கவுண்டர் தோட்டம் அருகில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | **14.65** |
| 13. | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், க.ச.எண் 217 சிக்கரசம்பாளையம் கிராமத்தில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | **22.70** |
| 14. | சத்தியமங்கலம் வட்டம், புதுக்குயனூர் கிராமத்தில் புதுக்குயனூர் சாலை – தவிட்டு மில் இடையே ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | **23.10** |
| 15. | திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், எலஞ்சி கிராமத்தில் ஐந்து அருவி அருகே சித்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல். | **27.00** |
| 16. | திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், எலஞ்சி கிராமத்தில் வால்விலான்குடி அணைக்கட்டின் மேல்புறம் சித்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல். | **27.00** |
| 17. | திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், புலியூர் கிராமத்தில் புலியூர் அணைக்கட்டின் கீழ்புறம் சித்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல். | **49.00** |
| | **மொத்தம்** | **416.40** |

(ரூபாய் நான்கு கோடியே பதினாறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)

எஸ். ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்